# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ **அதிவிசேஷமானது**

අංක 1461 / 8 – 2006 සැප්තැම්බර් 05 වැනි අඟහරුවාදා – 2006.09.05

***1461 / 8 ஆம் இலக்கம் – 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை***

**( அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது )**


# பகுதி III – காணிகள்

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழு அறிவித்தல்கள்

### காணிச் சீர்திருத்த ஆணைக்குழு

*1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்கக் காணிச் சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், 1986 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கக் காணிச் சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கக் காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங் களைக் கொண்டு இதன் கீழான அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கமத்தொழில் காணியில் அல்லது காணிகளில், அத்தகைய காணி அல்லது காணிகள் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட தேதிக்கு நேரடுத்து முன்னரான தேதியில் அக்கறை கொண்டிருந்த ஒவ்வோர் ஆளும் 2006 ஆண்டு 10 மாதம் 05 ஆந் தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள்ளாக அத்தகைய காணி அல்லது காணிகள் தொடர்பில் சட்டத்தின் பிரகாரம் கொடுபட வேண்டிய நட்டஈடு முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியைக் கோரும் எழுத்து மூலமான நஷ்ட ஈட்டுக் கோரிக்கையை முற் பிரதிகளில் சமர்ப்பிப் பதுடன் அந்தக் கோரிக்கையில் பின்வருவனவற்றையும் குறித்துக் காட்டல் வேண்டுமென இத்தால் பணிக்கின்றேன்.

அ. நட்டஈடு கோருபவரின் பெயரும் முகவரியும் ;

ஆ. அத்தகைய காணியில் அல்லது காணிகளில் அவருக்குள்ள அக்கறையின் தன்மை ;

இ. அவருடைய கோரிக்கையின் விபரம் ;

ஈ. அத்தகைய நட்டஈட்டிலிருந்து எவ்வளவு அவரால் கோரப் படுகின்றது என்பது ;

சகல நட்டஈட்டுக் கோரிக்கைகளும் காணிச்சீர்திருத்த ஆணைக் குழுவின் தவிசாளருக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

*01. கா. சீ. ஆ. விசேட இல. கொ/1783*
வெளிப்படுத்துநரின் பெயர் : மரணித்து விட்ட திருமதி ஹெரியட் விஜேசிங்க ; காணியின் பெயர் : தெல்கொட நிந்தகம ; மாவட்டம் : இரத்தினபுரி ; ஊர் : தெல்கொட ; கா. சீ. ஆணைக்குழுவிற்கு அளிக்கப்படும் அளவு : ஏ. 200, றூ. 0, பர் 00.

*02. கா. சீ. ஆ. விசேட இல. கொ/1721*
வெளிப்படுத்துநரின் பெயர் : மரணித்து விட்ட திருமதி றோனா மன்லியோட் ஹொரட்சன் ; காணியின் பெயர் : சமர்செட் வத்த ; மாவட்டம் : கண்டி ; ஊர் : யட்டபாத்த ; கா. சீ. ஆணைக்குழுவிற்கு அளிக்கப்படும் அளவு : ஏ. 29, றூ. 0, பர் 11.

*03. கா. சீ. ஆ. விசேட இல. கொ/1030*
வெளிப்படுத்துநரின் பெயர் : திரு. பரண பல்லிய குருகே பியசேன ஜினதாச ; காணியின் பெயர் : யாலபோவ வத்த ; மாவட்டம் : மொனராகல ; ஊர் : வெல்லவாய ; கா. சீ. ஆணைக்குழுவிற்கு அளிக்கப்படும் அளவு : ஏ. 201, றூ. 0, பர் 00.

*04. கா. சீ. ஆ. விசேட இல. கொ/1736*
வெளிப்படுத்துநரின் பெயர் : திருமதி நெரில் மானெல் அபேவர்த்தன ; காணியின் பெயர் : ஹன்கமு நவவத்த ; மாவட்டம் : குருணாகல் ; ஊர் : ஈரியகொட ; கா. சீ. ஆணைக்குழுவிற்கு அளிக்கப்படும் அளவு : ஏ. 22, றூ. 0, பர் 00.

சரத் கீர்த்திரத்ன,
தவிசாளர்,
காணிச் சீர்திருத்த ஆணைக்குழு.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அலுவலகம்,
ஸீ, 82, கிறக்கறீஸ் அவெனியு,
கொழும்பு 07,
2006.09.04.

09 - 696/1

திருத்தம்

**1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கக் காணிச் சீர்திருத்த சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலைத் திருத்துதல்**

இல. Ba/77 தொடர்பான 1977 ஆம் ஆண்டின் மாச்சு மாதம் 21 ஆந் திகதியிடப்பட்டதும் 257/7 ஆம் இலக்கத்தைக் கொண்டுள்ளதுமான *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில்* வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் உள்ள அறிவித்தல் நீக்கப்பட்டு இத்தால் திருத்தப்படுவதுடன் பின்வரும் அறிவித்தல் பதிலிடப்படுகிறது.

01. **கா. சீ. ஆ. விசேட இல. ப/77**

வெளிப்படுத்துநரின் பெயர் : திரு. வரனன் குடாபண்டார, கட்டுகஹ ; காணியின் பெயர் : மொறட்டுவேகம மற்றும் கிராகம்மன ; மாவட்டம் : மொனராகல ; ஊர் : மொரட்டுவேகம மற்றும் கிராகம்மன ; கா. சீ. ஆணைக்குழுவிற்கு அளிக்கப்படும் அளவு : ஏ. 297, றூ. 2, பர். 00.

சரத் கீர்த்திரத்ன,
தவிசாளர்,
காணிச் சீர்திருத்த ஆணைக்குழு.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அலுவலகம்,
ஸீ, 82, கிறக்கறீஸ் அவெனியு,
கொழும்பு 07,
2006.09.04.

09 - 696/2